பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரம் பழுதடைந்துவிட்டது. மாவு அரைக்கும் இயந்திரம் திரு.N.கிருஷ்ணன் என்பவரால் பழுது சரி செய்யப்பட்டது. மாவு அரைக்கும் இயந்திரம் பழுது சரி செய்த வகையில் ரூ.2800/- மேற்படி நபருக்கு வழங்க வேண்டும். மேற்படி தொகையை அன்னாருக்கு வழங்க மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

**தீர்மானம் எண்.2148 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினத்தந்தி நாளிதழின் தொழில் மலர் 2019-ல் வெளியிட்ட வகையில் விளம்பர கட்டணம் ரூ.9841/-ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.NGL/920-0014723 நாள் 02.10.2019 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2149 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பருவமழை காலம் ஆரம்பமாகியுள்ளதால், கொசுக்களால் பரவும் நோய்களை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 04.10.2019 மற்றும் 21.10.2019 ஆம் தேதிகளில் நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் (தற்போது 17 பணியாளர்கள் பணிபுரியும் விபரம் தெரிவிக்கப்பட்டபோது டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் கருதி மேலும் 10 நபர்களை கூடுதலாக பணியாளர்களை கொண்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. தற்போது இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் 17 பேர் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் தற்போதுள்ள சூழ்நிலையில், கொசுப்புழு ஒழிப்பு பணிகளுக்காக கூடுதலாக 10 DBC பணியாளர்கள் காலை 9 மணி முதல் மதியம் 2 மணிவரை பணியமர்த்த நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ஊதிய அடிப்படையில் அக்டோபர் 2019 முதல் டிசம்பர் 2019 வரை பணியமர்த்துவதற்கான உத்தேச செலவுத் தொக ரூ.17,0000/-க்கு மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2150 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் 21.09.2019 ஆம் தேதிய ஆய்வு கூட்டத்தில், நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கும் பொருட்டு, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் Jal Sakthi Abiyan, திட்ட நோக்கத்தினை செயல்படுத்தும் வகையில், வான் கொடுக்கும் மழைநீரை சேமித்து, நிலத்தடி நீர் மட்டத்தை பாதுகாக்கும் பொருட்டு, அனைத்து நகராட்சி கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தி, அதற்கான புகைப்படங்களை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யவும், அது தொடர்பாக வாராந்திர முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், கீழ்காணும் நகராட்சி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைப்பதற்கு, மதிப்பீடு ரூ.1,50,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | குழந்தை ஏசு காலனி ரேசன் கடை | 1 எண்ணம் |
| 2 | காரிதாஸ் காலனி அங்கன்வாடி | 1 எண்ணம் |
| 3 | மாதாகாலனி அங்கன்வாடி | 1 எண்ணம் |
| 4 | ஏசுதாஸ் காலனி அங்கன்வாடி | 1 எண்ணம் |
| 5 | துறைமுகத்தெரு நூலகம் | 1 எண்ணம் |
| 6 | களிமார் - கணியாகுடி நூலகம் | 1 எண்ணம் |
| 7 | நகராட்சி அலுவலக வளாகம் | 1 எண்ணம் |
| 8 | நகராட்சி மேல்நில நீர்த்தேக்க தொட்டிகள் | 10 எண்ணம் |
| | **மொத்தம்** | **17 எண்ணம்** |

மேற்காணும் 17 எண்ணம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1383/2019/இ1

**தீர்மானம் எண்.2151 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

நகராட்சி நிர்வாக ஆணையரின் 19.08.2019 ஆம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சியில் கட்டிட இடிபாடு கழிவுகள் (C & D Waste) கொட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்ட இடம் ஏற்கனவே குப்பை கிடங்காக பயன்படுத்தப்பட்ட இடமாகும். மேற்படி இடத்தில் C & D Waste கொட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 சென்ட் நிலத்தில் சுமார் 3.50 மீட்டர் உயரத்திற்கு குப்பைகள் குவித்து வைக்கப்பட்டுள்ளதால், கட்டிட இடிபாடு கழிவுகளை கொட்டுவதற்கு வசதியாக நிலத்தினை சமம் படுத்துவதற்கு, ஜே.சி.பி இயந்திரத்தை பயன்படுத்தி குப்பைகளை ஒதுக்கி வைக்கும் பணியினை மேற்கொள்ளவும், உடைந்துள்ள சுற்றுச்சுவர் மற்றும் நுழைவு வாயிலை (Gate)

சரி செய்வதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.65000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1323/2019/இ1

**தீர்மானம் எண்.2152 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட உப்பளம் உரக்கிடங்கில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடம் அமைக்கப்பட்டு, தற்போது குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. குப்பைகளை தரம் பிரிக்கும் போது மக்காத குப்பைகளை தனித்தனியே (இரும்பு, பிளாஸ்டிக், அட்டை, தேங்காய் ஓடு, பாட்டில்கள்) சேகரித்து குவியல் செய்வதற்கு, வளம் மீட்பு மையம் (Resource Recovery centre) அமைக்க, 26.08.2019 ஆம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆய்வு கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் 21.09.2019 ஆம் தேதிய ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில், இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள Windrwos platform -ன் ஒரு பகுதியில் RCC அமைப்பதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1384/2019/இ1

**தீர்மானம் எண்.2153 அங்கீகரிக்கப்பட்டது.**